மஞ்சூர்-குந்தா சாலையில் மீண்டும் உலா

வாகன ஓட்டிகள் தொல்லை ஆக்ரோஷமடைந்த புலி

வனத்துறையினர் எச்சரிக்கை



மஞ்சூர் ஜன.25: நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் சமீபகாலமாக வனவிலங்குகளின் நடமாட்டம் மிகுதியாக உள்ளது. குறிப்பாக காட்டுமாடுகள், சிறுத்தைகள் அதிக அளவில் உலா வருகின்றன. மஞ்சூர் கோவை சாலையில் கெத்தை பகுதியில் 2 குட்டிகளுடன் 4 காட்டு யானைகள் முகாமிட்டுள்ளd. இந்த யானைகள் இவ்வழியாக செல்லும் அரசு பஸ்கள் மற்றும் தனியார் சுற்றுலா வாகனங்களை அடிக்கடி வழிமறிப்பதும் வாடிக்கையாக உள்ளது.

கடந்த 21ம் தேதி இரவு மஞ்சூர்-குந்தா சாலையில் பழைய தாலுகா அலுவலகம் அருகே சாலையோர மரத்தின் கீழ் பெரிய புலி ஒன்று நின்று கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் ஜெகதாளா பகுதியில் நடைபெற்ற ஹெத்தை அம்மன் கோயில் திருவிழாவிற்கு சென்ற பக்தர்கள் இரவு காரில் மஞ்சூருக்கு திரும்பி கொண்டிருந்தனர். அப்போது சாலையோரத்தில் புலி நிற்பதை கண்டு காரில் இருந்த பக்தர்கள் அதிர்ச்சியடைந்து சற்று தொலைவாகவே காரை நிறுத்தி காரின் கண்ணாடிகளையும் ஏற்றி பாதுகாப்பு ஏற்படுத்தினர். இதைத்தொடர்ந்து புலியை தங்களது செல்போனால் வீடியோ எடுத்துள்ளனர். அதுவரை மரத்தடியில் நின்றிருந்த புலி அங்கிருந்து மெதுவாக நகர்ந்து நடுரோட்டில் ஒய்யாரமாக நடந்து சென்று சாலையோர புதருக்குள் சென்று மறைந்தது.

இதனை தொடர்ந்து பொதுமக்கள் சகஜமாக சென்று வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம், நேற்றும் பழைய தாலுகா அலுவலகம் அருகே அதே இடத்தில் புதரில் புலி நடமாடியுள்ளது. இதனை கண்ட வாகன ஓட்டிகள் லைட் வெளிச்சத்தை ஏற்படுத்தி புலியை தொந்தரவு செய்ததாக தெரிகிறது.

இது குறித்து வனத்துறையினருக்கு தகவல் சென்ற நிலையில், குந்தா ரேஞ்சர் சீனிவாசன் உத்தரவின் பேரில் 10க்கு மேற்பட்ட வனத்துறையினர் அப்பகுதி சென்று வாகன ஓட்டிகளையும், சுற்றுலா பயணிகளையும் எச்சரித்து அனுப்பியுள்ளனர். தொடர்ந்து புலியை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுமக்கள் கூறுகையில், "பழைய தாலுகா அலுவலகம் அருகே சாலையோரத்தில் உலா வந்த புலி அடர் வனப்பகுதி சென்றதால் மக்கள் நிம்மதியடைந்து இருந்தனர். தற்போது அதே பகுதியில் மீண்டும் புலி நடமாடி வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனவே வனத்துறை அதிகாரிகள் புலியை கூண்டு வைத்து பிடித்து முதுமலை பகுதிக்கு கொண்டு சென்று விட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

மாபெரும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு

இன்று நடக்கிறது

ஊட்டி, ஜன. 25: நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியிருப்பதாவது: தமிழ்நாடு முழுவதும் இன்று (25ம் தேதி) நடக்க இருக்கும் மாபெரும் நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்வு தொடர்பாக, பொது இடங்களில் சுத்தம் செய்தல் உட்பட பல் வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கலெக்டர் தலைமையில் மாவட்டம் முழுவதும் மாபெரும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு நிகழ்வு நடைபெறும் நீர்நிலைகள், குடியிருப்பு பகுதிகள், பொது இடங்கள், அரசு அலுவலகங்களில், நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளது. நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், நெகிழி கழிவு சேகரிப்பு குறித்து பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் விழிப்புணர்வு பேரணி நடந்தது. அனைத்து நகராட்சிகள், பேருராட்சிகள், உள்ளாட்சித்துறைகள், வனத்துறை, தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், முதல்வரின் பசுமை தோழர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய பசுமை காவலர்கள் இணைந்து இத்தகைய மாபெரும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு நிகழ்வு தொடர்பாக பொது இடங்களில் சுத்தம் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடவுள்ளனர். மேலும், அனைத்து அரசு துறைகளும் இந்த மாபெரும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு நிகழ்வில், இணைந்து சிறப்பாக செயல்பட வேண்டும்/ இவ்வாறு மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

பேருராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றிட வலியுறுத்தல்

ஊட்டி, ஜன. 25: நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேருராட்சிகளை, ஊராட்சிகளாக மாற்றிட வேண்டும் என குன்னூர் நுகர்வோர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் மனோகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, 'நீலகிரி மாவட்டத்தில் 11 பேருராட்சிகள் உள்ளன. இப்பகுதிகளில் பழங்குடி மக்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். இப்பகுதிகளில் தொழிற்சாலைகள் சிறு குறு தொழில்கள், வணிக நிறுவனங்கள் எதுவும் இல்லை. சிறுகுறு தேயிலை விவசாயிகள், தேயிலை தோட்ட தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய கூலி தொழிலாளர்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு கிடைக்கும் கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் உள்ளிட்ட வளர்ச்சி திட்டங்கள் எதுவும் பேருராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்படாததால் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை தரம் உயரவில்லை. தற்போது கோத்தகிரி பேருராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ளது.

இதனிடையே பேருராட்சியில் பணியாற்ற கூடிய அலுவலர்களின் பணியிட பாதுகாப்பு கருதியே மக்களின் அறியாமையை சாதகமாக்கி இப்பகுதிகளை பேருராட்சிகளாக வைத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேருராட்சிகளை ஊராட்சிகளாகவும், சிற்றூராட்சிகளாகவும் மாற்றிட வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தமிழக முதல்வர் மற்றும் மாவட்ட கலெக்டர் உள்ளிட்டோருக்கு மனுக்களும் அனுப்பியுள்ளார்.

அரசு போக்குவரத்து கழகங்களில்

ஓட்டுநர் தின விழா

▶ கூடலூர் அரசு போக்குவரத்து கழக கிளையில் நடைபெற்ற ஓட்டுனர் தின விழா நிகழ்ச்சியில் கிளையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு டவல் மற்றும் ரோஜா பூ வழங்கப்பட்டது.

கூடலூர், ஜன.25: சர்வதேச ஓட்டுனர் தினத்தை முன்னிட்டு தமிழக அரசு போக்குவரத்து ஓட்டுநர்கள் தமிழக அரசின் உத்தரவுப்படி சால்வை பூங்கொத்து வழங்கி கவுரவிக்கப்பட்டனர். நீலகிரி மண்டலத்தில் குன்னூர், கூடலூர், கோத்தகிரி, உதகை 1, உதகை 2, மேட்டுப்பாளையம் 2 ஆகிய கிளைகளில் அதிகாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை கிளைகளில் பணி புரியும் ஓட்டுநர்களை கௌரவம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது. கூடலூர் அரசு போக்குவரத்து கழக கிளை நடைபெற்ற நிகழ்ச்சியில் போக்குவரத்து கிளை மேலாளர் அருள் கண்ணன் தலைமை வகித்தார். பொறியாளர் ராஜேஷ் கண்ணா, ஓட்டுநர் ஆய்வாளர் ரவி, எல்பி எப் மண்டல பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், ஏடிபி தொழிற்சங்க நிர்வாகி லோகநாதன் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் ரகுபதி உதயசூரியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பந்தலூர் அரசு மருத்துவமனை கட்டுமான பணிகள் மந்தம்

▶ பந்தலூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு மருத்துவமனையின் பழைய குடியிருப்பு கட்டிடங்கள் உடைக்கப்பட்டுள்ளது.

பந்தலூர், ஜன.25: பந்தலூர் அரசு மருத்துவமனை தாலுகா தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் மருத்துவமனைக்கு தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வகம், ஈசிஜி, அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருந்து வருகிறது. மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து கடந்த பல மாதங்களுக்கு முன் புதிய கட்டிடம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு நெல்லியாளம் நகராட்சி மூலம் பணி துவக்கப்பட்டது. அதன்பின் எவ்வித பணிகளும் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக மருத்துவமனையில் பழைய குடியிருப்புகளை உடைத்து மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. ஆனால் அந்த பணிகள் துரிதமாக நடைபெறாமல் மந்தகதியில் நடைபெற்று வருவதால் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

புதிய கட்டிடம் கட்டும் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

TAMILNADU HORTICULTURE DEVELOPMENT AGENCY

e- Tender Notice No. FPM2/0267/2025 Dt: 24.01.2025

For and on behalf of the Governor of Tamil Nadu, e-tenders are invited from eligible contractors by the Managing Director, Tamil Nadu Horticulture Development Agency, 3rd floor, Agriculture Building Complex, Chepauk, Chennai-5 for the following works.

Sl. No	Description of work	Approximate Tender Value including 18% GST (Rs. In lakhs)
1	Construction of Girls Hostel at Tamilnadu Horticulture Management Institute at Madhavaram, Chennai.	385.789

e-Tender Bid Submission closing date: 12.02.2025 at 03.00 PM.

The e-tender documents, EMD details, BOQ and other tender documents which can be downloaded from the website: **https://tntenders.gov.in** free of cost. The tender inviting authority reserves the right to cancel or postpone the tender without assigning any reasons there for.

DIPR/ 286 /TENDER/2025

MANAGING DIRECTOR, TANHODA

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

29 & 30, தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 098. தொலைபேசி எண்கள் 044-23464528-33, தொலைநகல்எண் 044-23464536 மின்னஞ்சல் - dgmpurchase@gmail.com

பின்வரும் பொருட்களை கொள்முதல் செய்ய மற்றும் பணிகளுக்கு உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து இரண்டு பகுதி ஒப்பந்தப்புள்ளிகள் மாம் பொருட்கள் பணிகளை, அம்பத்தூர், மத்திய பால்பண்ணை, மாதவரம், திரை வேப்பாட்டு யைம் 5 மாநில பத்திய ஆவலைம், மாதவரம் மற்றும் கோழிக்கோடு பால்பண்ணைகளு ஆன்லைன் டெண்டர் சமர்ப்பிப்பு மூலம் வரவேற்கப்படுகிறது.

வ. எண்	பார்வை எண்	கொள்முதல் விவரம்	கோரப்பட்ட மதிப்பு கூட்டுவரி	முக்கிய தேதிகள்			
				டெண்டர் ஆவணம் பதிவிறக்கம் மற்றும் பிக்-அப்பிப்பத்தகான பேச்ட்டலில் அனுமதிக்கப்பட்ட நாட்கள் மற்றும் நேரம்	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படுமுன், ஒப்பந்ததாரர்களுடன் நடத்திப்பேச்சு கலந்தாய்வுக்கூட்ட நாள் மற்றும் நேரம்	நிறைவு செய்யப்பட்ட இரு பகுதி – ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சமர்ப்பிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி–I தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்.	ஆன்லைன் டெண்டர் சமர்ப்பிப்பு மூலம்தெரிவுக்கப்பட்ட பகுதி–I தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்
1.	6424/ K6/2024	சர்க்கரை தோய்ந்த பிஸ்கெட் கூம்பும், உணவுப்பொருள் (வெண்ணிலா, சாக்லேட், & ட்டட் ஸ்ட்ரவுட்_சி)	90.00	28.01.2025 to 13.02.2025 Up to 3.00 P.M.	04.02.2025 by 11.00 A.M.	13.02.2025 by 3:00 P.M.	14.02.2025 by 12:30 P.M.
2.	1910/UT/ CD/ 2024	ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு பிரிவுகளில் 3 shifts பணியிடங்கள் பணியாட்கள் 1 வருட காலத்திற்கு	97.23	28.01.2025 to 14.02.2025 Up to 3.00 P.M.	04.02.2025 by 11.30 A.M.	14.02.2025 by 3:00 P.M.	17.02.2025 by 3:00 P.M.
3.	78/AGME/ ETP/CD/ 2025	ஒப்பந்த அடிப்படையில் O&M of the Entire ETP பிரிவுக்கு 3 shifts பணியிடங்கள் பணியாட்கள் 2 வருட காலத்திற்கு	25.66		04.02.2025 by 12.30 P.M.	14.02.2025 by 3:00 P.M.	17.02.2025 by 4:00 P.M.
4.	02/SDC/ MVM/2025	ஒப்பந்த அடிப்படையில் ஆவின் திறன்மேம்பாட்டு மையம் மற்றும் மாநில மத்திய ஆய்வகத்தில் பராமரிப்பு பணிகளுக்கு பணியமர்த்துவதற்கு	35.00	28.01.2025 to 20.02.2025 Up to 3.00 P.M.	04.02.2025 by 11.30 A.M.	20.02.2025 by 3:00 P.M.	21.02.2025 by 03:30 P.M.
5.	1060/E2/ SNR/ 2024	கோழிக்கறிகளுக்கு பால் பண்ணை வளாகத்திலுள்ள தொழிலக சிற்றுண்டிசாலையை இரண்டு வருட காலத்திற்கு நடத்துவதற்கு	51.00	30.01.2025 to 13.02.2025 Up to 3.00 P.M.	05.02.2025 by 11.00 A.M.	14.02.2025 by 11:00 A.M.	17.02.2025 by 11:00 A.M.
6.	1389/E2/ SNR/ 2024	ஒப்பந்த அடிப்படையில் இரண்டு வருட காலத்திற்கு 3 shifts பணியிடங் ITI தகுதி கொற்ற ஆயிரட்டக்தகான வழங்குதல்	86.00		05.02.2025 by 11.30 A.M.	14.02.2025 by 11:00 A.M.	17.02.2025 by 11:00 A.M.

ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை "https://www.tntenders.gov.in" என்ற இணையத்தளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். தெளிந்த வேண்டிய முன் வைப்பு தொகை ஆன்லைன் மூலமாக மட்டுமே செலுத்த வேண்டும். முன் அதற்கி விதிமுறைகள், தொழில்நுட்ப விவரங்குறிப்பேடு, செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை விவரம், உச்சிட்டமைவரை "www.tntenders.gov.in" மற்றும் "http://www.aavinmilk.com" என்ற இணையதளங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து தெரிந்துகொள்ளலாம்.

செய்தொகு/288/ஒப்பந்தப்புள்ளி/2025 **இணை நிர்வாக இயக்குநர்**

பந்தலூர், கூடலூர் பகுதியில்

காட்டு யானைகள் ஊருக்குள் வராமல் தடுக்க இரும்பு வேலி அமைக்க வேண்டும்

பொதுமக்கள் கோரிக்கை

▶ கேரளா மாநிலம் சுல்தான் பத்தேரி மூடக்கொல்லி பகுதியில் காட்டு யானைகள் குடியிருப்புக்குள் வராமல் தடுப்பதற்கு ரயில் தண்டவாளம் மூலம் தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்தபடம்: முக்கட்டி பகுதியில் சாலையில் குறுக்கிட்ட காட்டு யானை

பந்தலூர், ஜன.25: நீலகிரி மாவட்டம்,கூடலூர் வனக்கோட்டம், பந்தலூர், கூடலூர் சுற்றுவட்டாரம் பகுதிகளில் காட்டு யானைகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது கோடை காலம் துங்கும் நிலையில் காடுகளில் வனவிலங்குகள் உண்ண உணவு இல்லாமல் குடியிருப்புகளை நோக்கி வருகிறது.

இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். குடியிருப்பு பகுதிக்குள் நுழையும் காட்டு யானைகள் விவசாய பயிர்களை சேதம் செய்வது, குடியிருப்புகளை உடைத்து சேதம் ஏற்படுத்துவது, சாலைகளில் குறுக்கிட்டு வாகனங்களை வழிமறிப்பது. சில நேரங்களில் மனித-யானை மோதல்கள் ஏற்பட்டு மனித உயிர்கள் பலியாவதும் என தொடர்கதையாக இருந்து வருகிறது.

காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை தடுப்பதற்கு வனப்பகுதியை ஒட்டி கேரளா மாநிலம் சுல்தான் பத்தேரி பகுதியில் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள ரயில் தண்டவாளம் இரும்புகளை கொண்டு தடுப்பு வேலிகள் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். ஆனால் அதற்கான நடவடிக்கை எதுவும் தமிழக வனத்துறையினர் எடுப்பதாக இல்லை. ஆங்காங்கு வனப்பகுதியை ஒட்டிய இடங்களில் காட்டு யானைகள் குடியிருப்புகளுக்கு வராமல் தடுப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள அகழிகள் மண் மூடி முற்புதர்கள் சூழ்ந்து அகழிகள் காணாமல் உள்ளது.

அதனை முறையாக பராமரிப்பு செய்யாமல் இருந்து வருவதால் நாள்தோறும் காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது.

நேற்று முன்தினம் குந்தலாடி பகுதியில் தேயிலைத்தோட்டத்தில் பசுந்தேயிலை பறிக்கும் பெண் தொழிலாளிகளை காட்டு யானை துரத்தி தாக்கியது. பந்தலூர் பஜார் பகுதிக்கு காட்டு யானைகள் புகுந்து மதில் சுவற்றின் இரும்பு கம்பிகளை உடைத்து சேதம் செய்தது.

இந்நிலையில் நேற்று பாட்டவயல் முக்கட்டி சாலையில் ஒய்யாரமாக வலம் வந்த காட்டு யானை வாகனங்களை வழிமறித்தது.

எனவே அரசு மற்றும் வனத்துறை காட்டு யானைகளிடமிருந்து பொதுமக்களை பாதுகாக்க வனப்பகுதிகளை ஒட்டி ரயில் தண்டவாளம் இரும்பு தடுப்பு வேலிகள் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

pnb Housing Finance Limited

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடில்லி-110 001. தொலைபேசிகள்:- 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கோயம்புத்தூர் கிளை:- பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1112, ராஜா பிளாசா, 2வது தளம், லட்சுமி மில் ஜங்கஷன், கோயம்புத்தூர் – 641037

சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துகளுக்காக)

இங்கு கீழே கையொப்பமிட்டவர் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் சட்டம் & கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் விதி 8(1) உடன்பாட்டில், மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு கணக்குக்கு எதிரேக் குறிப்பிட்டவாறுத் தொகையை அறிப்பு(கள்)த் தேதிமேற்கூறிய அறிவிப்புகள் கிடைக்கப்பெற்றத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறுக் கோரியிருந்தார். கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழேக் கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்டச் சொத்தினைகளை ஒவ்வொரு கணக்குக்கு எதிரேக் குறிப்பிட்டத் தேதிகளில் கவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்கள் அவர்களுக்குக் குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துகள் உடனான அனைத்து நடவடிக்கைகளும் தொகை மற்றும் கடன் ஒப்பந்தப்படி அதன்மீதான வட்டிக்காக, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் வசூலுக்கு உட்படும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

கடன் கணக்கு எண்	கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத் தொகை	சுவாதீனம் செய்த நாள்	அடமானச் சொத்து/கள் விவரம்
HOU/COI/0916/315616, கி.அ: கோயம்புத்தூர்	திரு. கதிரேசன் எஸ் மற்றும் திரு. செல்வராஜ்	14-10-2024	10–10– 2024 தேதியின்படி ரூ.23,64,997.37/– (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து அறுபத்து நான்கையிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா முப்பத்து ஏழு மட்டும்)	20-01-2025 (அடையாளப்படுத்தப்பட்ட சுவாதீனம்)	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, கொண்டையம்–பாளையம் கிராமத்தில், S.F.No.235/2B–0.91 ஏக்கர் மற்றும் S.F.No.233/7–0.30 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் 1.01 ஏக்கர் நிலங்கள் வீட்டு மனைகளாக ஒதுக்கப்பட்டன. இந்த தள எண்.3 இல், ஆயண எண். 1820/2006 இன் படி, கட்டிடத்துடன் சேர்த்து 2187 சதுர அடி பரப்பளவு கொண்ட, தள எண்.3 இன் இந்த ஒரு பகுதியில் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகள் உள்ளன, வடக்கு–தள எண்.4–ன் தெற்கே–எஸ்.சரிதாவின் மீதமுள்ள நிலங்கள் கிழக்கு–எல்.எஃப்.எண்.233/6 & 235/2 மேற்கில்–20 அடி அகலம் கொண்ட வடக்கு தெற்கு லேஅவுட் சாலை இந்த நடுவில் கிழக்கு மேற்கு வடக்குப் பக்கத்தில்–43 அடி கிழக்கு மேற்கில் தெற்குப் பக்கத்தில் – 40 அடி வடக்கு தெற்கு கிழக்குப் பக்கத்தில்–32 1/4 அடி வடக்கு தெற்கு மேற்குப் பக்கத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி–25 1/2 அடி அங்கிருந்து மேற்கு நோக்கி–3 அடி அங்கிருந்து வடக்கு நோக்கி 6–3/4 அடி மொத்தம் 1310 சதுர அடி அல்லது 03 சென்ட் 03 சதுர அடி கிழக்கு நோக்கிய ஆர்.சி.சி கட்டிடம் 520 சதுர அடியில் மற்றும் 300 மொசைக் தரையுடன் கதவுகள், ஜன்னல்கள், பொருத்துதல்கள், சாதனங்கள், நீர் இணைப்பு, மின்சார இணைப்பு, அதன் வைப்புத்தொகைகள், குளியலறை, கழிப்பறை மற்றும் லேஅவுட் சாலைகள் மற்றும் பிற வசதிகளுடன் கூடிய வழக்கமான தளவமைப்பு சாலைகள் மற்றும் பிற வசதிகளுடன். பழைய கதவு எண்.2/1 D (கோட்டையம்பாளையம்), மின்சார சேவை இணைப்பு எண்.845. சொத்து S.F.எண்.233/7 இல் அமைந்துள்ளது. கொண்டயம்பாளையம் பஞ்சாயத்தில் அமைந்துள்ள சொத்து.
HOU/COI/0318/508021, கி.அ: கோயம்புத்தூர்	ஸ்ரீமதி. கலைவாணி W/o. மறைந்த திரு. கரிவரதராஜ்	27-08-2024	24–08–2024 தேதியின்படி ரூ.5,28,270.05 (ரூபாய் ஐந்து– இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து இருநூற்று எழுபத்து மற்றும் பைசா ஐந்து மட்டும்)	20-01-2025 (அடையாளப்படுத்தப்பட்ட சுவாதீனம்)	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, காரமடை கிராமத்தில், S.F.No.729/1A இல் 0.26 ஏக்கர் நிலம் மற்றும் சமிக்தியை துணைப்பிரிவு மற்றும் பட்டா எண்.2727 இன் படி, புதிய S.F.No.729/1A5 இல் உள்ள நிலங்கள் வீட்டு மனைகளின் தளவமைப்பாக மாற்றப்பட்டுள்ளன, மேலும் அந்த தள எண்.1 இன் வடக்குப் பகுதியில் 1564 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் R.C.C கட்டிடத்துடன் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகளுக்குள் உள்ளது:– கப்பிரமணியன் கிழக்கு–வடக்கு–தெற்கு பொதுவான சாலைக்கு தெற்கே – ந.ராஜுக்குச் சொந்தமான தள எண்.2 மேற்கு–திம்மையனுக்குச் சொந்தமான பண்ணை நிலம் இந்த மத்திய கிழக்கில் மேற்கில்–தெற்குப் பக்கத்தில் 58 அடி கிழக்கு மேற்கில்–கிழக்கில் 53 1/2 அடி வடக்கு தெற்கில்–மேற்கில் 27 34 அடி வடக்கு தெற்கில் பக்கவாட்டு–28 அடி பரப்பளவு 1564 சதுர அடி அல்லது 3 சென்ட் மற்றும் 256 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், கதவுகள், ஜன்னல்கள், நீர் இணைப்பு, மின்சார இணைப்பு மற்றும் இரண்டு வைப்புத்தொகைகளுடன் கூடிய ஆர்.சி.சி கட்டிடத்துடன், பொதுவான பயன்பாட்டு சாலைகள் மற்றும் பொதுவான பாதைகள் போன்றவற்றுக்கான உரிமைகளைப் பயன்படுத்தி, கதவு எண்.83–2. மின்சார இணைப்பு எண்.03–141–025–0350 கட்டிட வரி மதிப்டு எண்.1931 மேற்கண்ட சொத்து காரமடை பேருராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது மற்றும் குட்டையுர், ஊர்கவுண்டர் தெரு வார்டு எண்.3 இல் அமைந்துள்ளது.
HOU/COI/0123/106914, கி.அ: கோயம்புத்தூர்	திரு. சரவணன் ஆர் & திரு. ராஜு ஜே	04-10-2024	04.10.2024 தேதியின்படி ரூ.22,64,156.66 (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து நூற்று ஐம்பத்து ஆறு மற்றும் பைசா அறுபத்து ஆறு மட்டும்)	20-01-2025 (அடையாளப்படுத்தப்பட்ட சுவாதீனம்)	கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தில், அன்னூர் துணைப் பதிவு மாவட்டம், அன்னூர் தாலுகா, குப்பேபாளையம் கிராமத்தில், பட்டா எண். 2146 இன் படி, S.F.No.327/2 இல் 2.64 ஏக்கர் நிலம் பட்டா எண். 2146 இன் படி, S.F.No.327/3 இல் 2.01 ஏக்கர் நிலம் மொத்தம் 4.65 புஞ்சை ஏக்கர் நிலம், கோயம்புத்தூர் நகர மற்றும் கிராம திட்டமிடல் ஆணையத்தால் 02.09.2022 தேதியிட்ட மா.வா/கோ.தி.மு.எண்.292/2022 இல் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனை தள அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது, அதே நாளில் உரிம எண்.348/2022 இல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இது குப்பேபாளையம் பஞ்சாயத்தால் 15.09.2022 தேதியிட்ட ஒப்புதல் எண்.01/2022 இல் அங்கீகரிக்கப்பட்டது, மேலும் கூறப்பட்ட தளவமைப்பு என் பெயரிடப்பட்டது. "நெடுஞ்சாலை நகர கட்டம் II" மற்றும் கூறப்பட்ட தளவமைப்பு தள எண்.98 பின்வருமாறு எல்லையாக உள்ளது:–S.F.No.306/1A2 க்கு வடக்கு –7.2 மீட்டர் அகலமான கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை கிழக்கு –S.F.No.327/1 தள எண்.99 க்கு மேற்கே இந்த நடுவில், கிழக்கு மேற்கு வடக்குப் பக்கத்தில் –22'0" அடி தெற்குப் பக்கத்தில் கிழக்கு மேற்கே –20'7" அடி கிழக்குப் பக்கத்தில் வடக்கு தெற்கே –50'5" அடி மேற்குப் பக்கத்தில் வடக்கு தெற்கே –15'1" அடி பரப்பளவு கொண்டது. 1079 சதுர அடி 2 சென்ட் 208 சதுர அடி 2 சென்ட் 208 சதுர அ